
உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்

## பாடம் - 11



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 11

## பழைய ஏற்பட்டின் முக்கியத்துவம் என்ன ?

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் பழைய ஏற்பாடு பற்றியும் வேதாகமத்தில் அதன் முக்கியத்துவமும், நோக்கமும் என்னவென்று தியானிப்போம்.

**பழைய ஏற்பாடு வேதாகமத்தில் நான்கில் மூன்று பாகத்தைக்(3/4) கொண்டதாக, மொத்தம் 39 புத்தகங்களை அடக்கியுள்ளது.**




இன்று பலர் பழைய ஏற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இன்னும் குறிப்பாக வேதாகம சங்கம் பழைய ஏற்பாட்டை கழித்துவிட்டு புதிய ஏற்பாட்டை மட்டுமே அச்சிடுகிறது.

பழைய ஏற்பாட்டிலிருந்து **சங்கீத புத்தகம், நீதிமொழிகளின் புத்தகம்**.... இன்னும் சற்றுபோனால் **பிரசங்கி** மட்டுமே வாசிக்கப்பட்டு, மீதி அனைத்தும் ஒதுக்கப்படுகிறது.

அநேகர் பழைய ஏற்பாட்டை ஒரு சரித்திரமாக....

ஏற்கனவே நிறைவேறித் தீர்ந்த நிகழ்ச்சிகளாக மட்டுமே கருதுகின்றனர்...

இஸ்ரயேல் மக்களைப் பற்றியும்.... அவர்களுடைய அனுபவங்கள்.... யுத்தங்கள்... தனிப்பட்ட மனிதர்கள்.... அவர்களுடைய வார்த்தைகள்... மற்றும் இஸ்ரயேல் தேசம் எகிப்திலிருந்து கானான் நோக்கி சென்ற பயணத்தை பற்றிய விவரங்கள்....இன்னும் அதனை தொடர்ந்து நடந்தேறிய நிகழ்ச்சிகள்...



**ஆனால், இவையெல்லாம் பதிவு செய்யப்பட்டுள்ளதின் காரணம் என்ன?**

**இவை வெறும் பழைய சரித்திரம்தானா?....(அ) ....வெறும் வேதாகம சரித்திரம்தானா?**

**...(அ)...பல ஆயிர வருடங்களுக்குமுன் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் நீண்ட தொகுப்புகளா?**

**இவற்றின் நோக்கம்தான் என்ன?**

**இறுதியாக கேட்கப்படுவது என்னவெனில்.........இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாடு எவ்விதத்தில் முக்கியமானதாக இருக்கிறது?**

இப்பொழுது, காரணகாரியங்களை நிதானிப்போம்...

## காரணம் -1

**எபிரேயர் 10:1**

**"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளை செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது."**

**இவ்வசனத்தின் பொருள் என்ன?**

**"நிழல்"....என்பதன் பொருள் என்ன?**

**"வரப்போகின்ற நன்மைகள்"....என்பதன் பொருள் என்ன?**

இங்கு அப்போஸ்தலராகிய பவுல் மோசேயின் நியாயப்பிரமாணங்கள் வரப்போகின்ற நன்மைகளுக்கு ஒரு **“நிழலாய்”** இருக்கின்றது என்று குறிப்பிடுகிறார்.

## இவை எப்பொழுது வரும்?

ஆம், இயேசு கிறிஸ்துவிற்கு……பின்பு.

தேவன் நாம் அனைவரும் அறிந்தபடி ஒரு தீர்மானிக்கப்பட்ட திட்டம் வைத்துள்ளார். ஆனால், பூமியில் இயேசுவின் வருகை வரை தேவ திட்டத்தை யாரும் அறிந்திருக்கவில்லை.

இந்த **“வரப்போகும் நன்மைகள்”**, பாவம் மற்றும் மரணத்தின் பிடியினின்று மனிதனை மீட்க, கல்வாரி சிலுவையில் இயேசு மரித்ததை மையமாக வைத்து நிறைவேறும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறிக்கிறது.

அவருடைய குமாரனின் வருகைக்குபின் நிறைவேறும் இந்த தெய்வீக திட்டமானது (கலாத்தியர்4:4,5)அவர் வருவதற்கு முன்பாகவே **“நிழலாக”** காண்பிக்கப்பட்டது.

**எப்படி ஒரு கட்டிடக் கலைஞர் வீடு கட்டும்முன்பு, “மாதிரி” வீட்டை செய்து காண்பிப்பாரோ, அதுபோல் இந்த நிழல்கள் எல்லாம் நமக்கு ஒரு “மாதிரியாக” விளங்குகிறது.**



வேதாகமத்தில் இவையனைத்தும் **“நிழல்”** **(கிரேக்க சொல் –ஆபோஸ்”)** என்றும், நிறைவேற வேண்டிய அனைத்தும் **“பொருள்”(உண்மைகள்)** என்றும் குறிப்பிடப்படுகிறது.

**பழைய ஏற்பாடு முழுவதும் “நிழலும் பொருளுமாக” நிறைந்துள்ளது.**

இவ்விதமாக அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகையில், (எபிரெயர் 10:1-ஐ மீண்டும் முழுமையாக வாசிக்கவும்) இஸ்ரயேல் மக்கள் செலுத்திய ஒரே விதமான பலிகளெல்லாம் வரப்போகிற உண்மையான பலிக்கு வெறும் நிழலாக இருக்கிறது என்று குறிப்பிடுகின்றார்.



ஏனென்றால், காளைகளையும், வெள்ளாட்டுக்கடாக்களையும் பலி செலுத்துவதால் ஒருவருடைய பாவமும் கழுவப்படமாட்டாது என்று வாசிக்கிறோம்.

**எபிரேயர் 10:4**

**“அல்லாமலும், காளை, வெள்ளாட்டுக் கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே” -**

இப்பொழுது நாம் பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்திற்கான இரண்டாவது காரணத்தை சற்று கவனிப்போம்.

# காரணம் - 2

**ரோமர் 15:4**

**"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகலெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது."**

ஆகவே, பழைய ஏற்பாட்டில் "முன்பு", எழுதப்பட்டவை யாவுமே, "நம்முடைய" அதாவது சபையினுடைய படிப்பினைக்காகவும், பொறுமைக்காகவும் ஆறுதலுக்காகவுமே.



**எவ்விதத்தில்?** – என்று ஒருவர் கேட்கலாம்.

எப்படி மாம்ச சரீரமானது பலவீனம் அடைந்து வியாதிப்படுகிறதோ அவ்வாறே நாம் ஆவிக்குரிய வாழ்விலும் பலவீனமடைந்து வியாதிப்படுகிறோம்.



ஒருவனுக்கு ஜலதோஷம் பிடித்தால்.... அதை குணப்படுத்த அதற்குரிய மருந்து மாத்திரைகளான "கோல்டரின்" அல்லது "கோல்டாக்ட்"... ஜுரத்திற்கு... "குரோசின், நோவால்ஜின்" போன்றவைகளை உட்கொள்கிறார்கள். அதுபோலவே ஆவிக்குரிய வியாதிகளும், அதற்கான ஆவிக்குரிய மாத்திரைகளும் உள்ளன.



இப்பொழுது நாம் ஆவிக்குரிய வியாதிக்குட்பட்ட நிலை சிலவற்றை காணலாம்.

## ஒருவருடைய விசுவாசம் பலவீனம் அடையும்போது...



அதற்கு உட்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய மருந்து---

## ஆபிரகாம்

அவர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தன் ஒரே மகனை தகனபலியாக செலுத்த மூன்று நாட்கள் பயணம் செய்தார்... அவருடைய மேன்மையான விசுவாசத்தை வாசிக்கும் பொழுது நம்முடைய விசுவாசமும் தேவன்மேல் அதிகரிக்கிறது. (ஆதியாகமம் 22:1-15)

## நம்முடைய ஆவிக்குரிய வைராக்கியம் குறைந்து.... கொஞ்சம் கொஞ்சமாக குளிர்ந்து போகும்போது...

அதற்கு உட்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய மருந்து....


## தானியேல்



பாபிலோனியர்கள் மத்தியிலும், மேதோ - பெர்சியர்கள் மத்தியிலும் அவர் வாழ்ந்தபோது, அவிசுவாசிகள் மத்தியில் தமது தேவனை முழுமனதுடன் அறிக்கையிடுவதில் அவர் சிறிதும் வெட்கப்படவுமில்லை, பயப்படவுமில்லை. அவர் தேவன் மேல் வைத்திருந்த பக்தி வைராக்கியத்தை குறித்து வாசிக்கும் பொழுது நமக்கு மகிமையின் தேவன் மேல் வைராக்கியம் ஏற்படுகிறது.

## வாழ்வில் நாம் சந்திக்கும் துன்பங்கள் நம்மை பொறுமையிழக்கச்செய்து, நம்மை முறுமுறுக்கவும் குறைகூறவும் செய்தால்...

அதற்கு உட்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய மருந்து--



## யோபு

யோபுவின் அனுபவங்களையும், அவருடைய துன்பங்களையும் அவருடைய வார்த்தைகளையும் நாம் **யோபு 1:21**-ல் வாசித்து அறியலாம்.

**“நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன், கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.”**

மீண்டுமாக நாம் வாசிக்கையில்,

**யோபு 2:9,10**

**“அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து, நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன், நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய், தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை.”**

ஆம் யோபுவிற்கு நேர்ந்த துன்பங்கள் மற்றும் பிரச்சனைகளோடு ஒருபோதும் நம்முடையவைகளை ஒப்பிட முடியாது. மேலும் யோபுவின் விசுவாச அறிக்கைகள், நாம் நம் தேவனிடத்தில் பொறுமையாய் இருக்க பெலத்தைத்தரும்.

இது போன்ற ஆவிக்குரிய மருந்துகள் அநேகம்...

**நோவா, மோசே, யோசேப்பு, தாவீது, எலியா......**

இவர்களுடைய வாழ்க்கை அனுபவங்கள்...... இன்று நமக்கு(சபைக்கு) ஆறுதலாகவும்... உற்சாகப் படுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

இப்பொழுது நாம் பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்திற்கான மூன்றாவது காரணத்தை பார்ப்போம்.

# காரணம் - 3

## 1 கொரிந்தியர் 10:11

**"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது. உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது."**

பழைய ஏற்பாட்டில் நடந்தேறிய நிகழ்வுகள் அனைத்தும் "நமக்கு"(சபைக்கு) ஒரு"திருஷ்டாந்தமாக" விளங்குகிறது.

### "திருஷ்டாந்தம்" என்றால் என்ன ?

**"திருஷ்டாந்தம்"** என்பது நம்முடைய வழ்க்கையை சீர்ப்படுத்தி கொள்ள வேண்டிய வழிமுறைகளை, முன்னதாக மாதிரியாக நடித்து காண்பிப்பது. இது போல் அநேக கதாபாத்திரங்கள் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்து நமக்கு திருஷ்டாந்தங்களாக அருளப்பட்டிருக்கிறது.

இதை சரியாக புரிந்துக்கொள்ள பழைய ஏற்பாட்டில் நிறைவேறி முடிந்த ஒரு "திருஷ்டாந்தத்தை" தியானித்து உணரலாம்.

ஆதியாகமத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு காரியத்தை வாசிப்போம்.



## ஆதியாகமம் 24:1-67

(எல்லா வசனங்களையும் வாசிக்கவும்)

இங்கு, ஆபிரகாம் தன்னுடைய அன்பு மகன் ஈசாக்கின் நிமித்தமாக ஒரு மணப்பெண்ணைத் தேட அவருடைய பிரதான ஊழியக்காரனை அனுப்பியதைக் குறித்த காரியங்களை இதில் பார்க்கிறோம். மீண்டும் இந்த கதையின் சுருக்கத்தை நாம் வசனங்கள் மூலமாக வாசித்து அறிந்து கொள்ளுவோம்.

### ஆதியாகமம் 24:1,2

**"ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான், கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார். அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவனும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய தன் ஊழியக்காரனை நோக்கி..."**

இங்கு ஆபிரகாம் தன் முதிர்வயதில் தன் ஒரே மகன் ஈசாக்கிற்கு மணப்பெண்தேட திட்டமிடுகிறார்.

## ஆதியாகமம் 24:3,4

**"நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல் நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்கிற்குப் பெண் கொள்வேன் என்று வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின் கீழ் வை என்றார்."**



அவர் தமது வேலையாள் எலியேசருக்கு

**ஆதியாகமம் 15:2** - **"தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே..."**

ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் தூர தேசத்திற்கு சென்று பெண் கொள்ளும்படி கட்டளையிடுகிறார்.
பின்பு நாம் வாசிக்கையில்

## ஆதியாகமம் 24:10

**"பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டு போனான், தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன. அவன் எழுந்து புறப்பட்டுப்போய், மெசப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊரில் சேர்ந்து.."**



எலியேசர் “உச்சிதமான” பொருட்களை 10 ஒட்டகங்களில் ஏற்றி மெசப்பொத்தாமியாவில் உள்ள நாகோரின் பட்டணத்திற்கு நீண்ட பயணத்தை மேற்கொண்டார். பின்பு நாம் வாசிக்கையில்,



**ஆதியாகமம் 24:11**

**“ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே, தண்ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்கால வேளையிலே, ஒட்டகங்களை மடக்கி, தனக்குள்ளே சொல்லிக் கொண்டது என்ன...”**



ஆம், ஸ்திரீகள் தண்ணீர் மொள்ள வரும் சாயங்கால வேளையில் ஒரு கிணற்றண்டையில் அவருடைய பிரயாண முடிவுக்கு வந்தது.

அங்கு எலியேசர் இவ்வாறு ஜெபம் செய்தார்.

**ஆதியாகமம் 24:12-14**

**“என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும். இதோ, நான் இந்தத் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே, நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது...... குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான்”**



ஆம், எலியேசர் தாம் மேற்கொண்ட பயணத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும்படியாகவும், மேலும் தேர்ந்தெடுக்கப்படுகிற பெண் யார் என்று கண்டறிய ஒரு "அடையாளம்" காட்டும்படியாகவும் அவர் ஆபிரகாமின் தேவனிடத்தில் பிரார்த்தனை செய்தார்.

**பின்பு நடந்தது என்ன ?**

இதை குறித்து வாசிக்கையில்....



## ஆதியாகமம் 24:15

**"..அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த ரெபேக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வந்தாள்."**

ஆம், "....அவன் இப்படி சொல்லி முடிக்கும் முன்னே..." ரெபேக்காள் கிணற்றுக்கு தண்ணீர் எடுக்க வந்தாள். பின்பு நாம் வாசிக்கையில்,

## ஆதியாகமம் 24:16

**"அந்த பெண் மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள், அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள்."**

அவள் மிகுந்த அழகுள்ளவளும், புருஷனை அறியாத கன்னியுமாய் இருந்தாள். மீண்டும் வாசிக்கையில்

## ஆதியாகமம் 24:17-19

**“அப்பொழுது அந்த ஊழியக்காரன் அவளுக்கு எதிர்கொண்டோடி, உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்.... குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி....”**




ஆம், எலியேசர் குடிப்பதற்கு தண்ணீர் கேட்கையில், அவளும் உடனே தண்ணீர் தருவதற்கு சம்மதித்து அவருடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தாள்.

**சரியான பெண்ணை காண்பிக்க வேண்டும் என்ற எலியேசரின் ஜெபத்திற்கு, தேவன் இவ்வாறு ஒரு அற்புதமான, சரியான அடையாளத்தை காண்பித்தார்.**

பின்பு நாம் வாசிக்கையில்....

## ஆதியாகமம் 24:20,21

**“சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரை தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள். அந்த மனிதன் அவளைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று அறியும்பொருட்டு மவுனமாயிருந்தான்.”**



10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கக்கூடிய மிக "கடினமான வேலையை" அவள் மேற்கொண்டாள். "சற்று யோசித்துப் பாருங்கள் 10 ஒட்டகத்திற்கு சுமாராக 10 குடம் தேவைப்பட்டால் 10 ஒட்டகத்திற்கு 100 குடங்கள் தண்ணீர் தேவைப்பட்டிருக்கும்."

அவ்வளவு நேரமும் எலியேசர் அவளை கவனித்துக் கொண்டும், தம் ஜெபத்தைக்கேட்ட தேவனுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டும் இருந்திருக்கவேண்டும். பின்பு நாம் வாசிக்கையில்....

**ஆதியாகமம் 24:22**

**"ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின் அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும், அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கல் எடைப் பொன்னுள்ள இரண்டு கடகங்களையும் எடுத்துக் கொடுத்து.."**

இவைகளுக்கு பின் அந்த பெண்ணின் செயல்பாடுகளை கவனித்துக் கொண்டிருந்த எலியேசர், அரை சேக்கல் எடையுள்ள ஒரு பொன் காதணியும் 10 சேக்கல் எடையுள்ள 2 பொன் கடகங்களையும் அவளுக்கு அன்பளிப்பாக கொடுத்தார். இந்த பரிசுகளை பெற்ற ரெபேக்காள் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்திருக்க வேண்டும்.



## இதை கற்பனை செய்ய முடிகிறதா?

மேலும், 10 ஒட்டகங்களுக்கு தண்ணீர் வார்த்துக் கொடுத்ததற்கே இவ்வளவு பெரிய பரிசா ?
-என்று அவள் நிச்சயமாகவே ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

பின்பு நாம் வாசிக்கையில்...

### ஆதியாகமம் 24:23

**“நீ யாருடைய மகள், எனக்குச் சொல்லவேண்டும், நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க இடம் உண்டா என்றான்.”**

ஆம், பின்பு எலியேசர் அவளுடைய குடும்பத்தைப் பற்றியும், தான் அவள் இல்லத்திற்கு வந்து தங்க இயலுமா என்றும் விசாரித்தார்.

அதற்கு பதிலாக....

### ஆதியாகமம் 24:24

**“அதற்கு அவள் – நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்று சொன்னதுமன்றி....”**

அவள் ஆபிரகாமின் மூத்த சகோதரரான நாகோரின் பேத்தி என்று கூறுகிறாள். மேலும் ரெபேக்காள் கூறியது,

### ஆதியாகமம் 24:25

**“எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும் இருக்கிறது, இராத்தங்க இடமும் உண்டு என்றாள்”**

இரவு தங்குவதற்கு இடமும் ஒட்டகங்களுக்கு உணவும் தருவதாக வாக்களித்து அவரை தம் இல்லத்திற்கு அவள் அழைத்து செல்கிறாள்.



மேலும், வீட்டிற்கு ஓடிச் சென்று தம் இல்லத்தார் அனைவரிடமும் நடந்தவை அனைத்தையும் பெரு மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கிறாள்.

பின்பு நாம் வாசிக்கையில்,

## ஆதியாகமம் 24:28-31

**"அந்தப் பெண் ஓடி, இந்தக் காரியங்களைத் தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள். ரெபேக்காளுக்கு ஒரு சகோதரன் இருந்தான்; அவனுக்கு லாபான் என்று பேர்; அந்த லாபான் வெளியே துரவண்டையில் இருந்த அந்த மனிதனிடத்துக்கு ஓடினான். அவன் தன் சகோதரி தரித்திருந்த அந்தக் காதணியையும், அவள் கையில் போட்டிருந்த கடகங்களையும் பார்த்து இன்ன இன்னபடி அந்த மனிதன் என்னோடே பேசினானென்று தன் சகோதரி ரெபெக்காள் சொன்ன வார்த்தைகளை கேட்டமாத்திரத்தில், அந்த மனிதனிடத்தில் வந்தான். அவன் துரவு அருகே ஒட்டகங்கள் அண்டையில் நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது அவன்...கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும், நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம் பண்ணியிருக்கிறேன் என்றான்."**

அவள் வீட்டிற்கு ஓடிச்சென்று தன் தந்தையிடமும் தன் மூத்த சகோதரன் லாபானிடத்திலும் நடந்தவற்றை கூறினாள். அவர்களும் விரைந்து வந்து எலியேசரை தங்கள் வீட்டிற்கு அழைத்து செல்கிறார்கள். ஏனெனில், ஒருவரும் இவ்வளவு அழகான விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை தினந்தோறும் கிணற்றண்டையில் பெறுவதில்லை. சிறிது நேரம் இளைப்பாறியபின் எலியேசர் தான் யார் என்பதையும், எதற்காக வந்தார் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார். பின்பு நாம் வாசிக்கையில்,

## ஆதியாகமம் 24:34

**"அப்பொழுது அவன், நான் ஆபிராகாமுடைய ஊழியக்காரன்."**

ஆம், எலியேசர் தன்னை ஆபிரகாமின் ஊழியக்காரனென்றும், தான் அங்கு வந்ததின் நோக்கத்தையும் தொடர்ந்து எடுத்துரைத்ததை கீழுள்ள வசனங்களில் வாசித்து அறியலாம்.

## ஆதியாகமம் 24:35-48

**"கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீவதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார், கர்த்தர் அவருக்கு ஆடு மாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார். என் எஜமானுடைய மனைவியாகிய சாராள் முதிர்வயதான போது, என் எஜமானுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள், அவர் தனக்கு உண்டான யாவையும் அவனுக்குக்**

கொடுத்திருக்கிறார். என் எஜமான் என்னை நோக்கி, நான் குடியிருக்கிற கானான் தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல், நீ என் தகப்பன் வீட்டுக்கும், என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டுக்கொடுக்கும்படி சொன்னார். அப்பொழுது நான் என் எஜமானை நோக்கி... ஒரு வேளை அந்தப் பெண் என் பின்னே வராதேபோனாலோ என்று கேட்டதற்கு, அவர்.... நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார், என் இனத்தாரிடத்திலும், என் தகப்பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்வாய். நீ என் இனத்தாரிடத்துக்குப் போனால், என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய். அவர்கள் உனக்குப் பெண்கொடாமற்போனாலும், நீ என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய் என்றார். அப்படியே நான் இன்று துரவண்டையில் வந்து -- என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரே, என் பிரயாணத்தை நீர் இப்பொழுது வாய்க்கப்பண்ணுவீரானால்,, இதோ, நான் தண்ணீர்த்துரவண்டையிலே நிற்கிறேன், தண்ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையை நான் நோக்கி – உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத்தரவேண்டும் என்று கேட்கும்போது – நீ குடி என்றும் உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண்ணே கர்த்தர் என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாக வேண்டும் என்றேன். நான் இதை என் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே, இதோ, ரெபேக்காள் தன் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்து, துரவில் இறங்கிப்போய்த் தண்ணீர் மொண்டாள், அப்பொழுது நான் எனக்குக் குடிக்கத்தரவேண்டும் என்றேன். அவள் சீக்கிரமாய்த் தன் தோள்மேலிருந்த குடத்தை இறக்கி, குடியும், உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள். நான் குடித்தேன் ஒட்டகங்களுக்கும் வார்த்தாள். அப்பொழுது – நீ யாருடைய மகள் என்று அவளைக் கேட்டேன். அதற்கு அவள் – நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்றாள். அப்பொழுது அவளுக்குக் காதணியையும், அவள் கைகளிலே கடகங்களையும் போட்டு, தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டு, நான் என் எஜமானுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை நேர்வழியாய் நடத்திவந்த எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.”



ஆம், அவர் அங்கு வந்ததின் நோக்கத்தையும், தனக்கு தண்ணீர்த்துரவண்டையில் ஏற்பட்ட அனுபவத்தையும், தேவன் அவரை அற்புதமாகவும், அதிசயமாகவும் வழிநடத்தின விதத்தையும், ரெபேக்காள் தான் ஈசாக்குக்கு நியமிக்கப்பட்ட மணப்பெண் என்பதனை கண்டடைய செய்தார் என்பதனையும் மிக விவரமாக கூறினார். இறுதியாக அவர் அவர்களிடம் கேட்ட காரியத்தை குறித்து வாசிக்கையில்...

## ஆதியாகமம் 24:49

**"இப்பொழுது நீங்களும் என் எஜமானுக்குத் தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால் எனக்குச் சொல்லுங்கள். இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள். அப்பொழுது நான் வலது புறத்தையாகிலும் இடது புறத்தையாகிலும் நோக்கிப் போவேன் என்றான்."**

அவர் பெத்துவேலிடத்திலும் லாபானிடத்திலும் ரெபேக்காளை ஈசாக்கிற்கு மணமுடித்து வைக்க அவர்களுடைய முடிவை கேட்கிறார்.

இங்கு, வலதுபுறம் என்றால் ஏற்றுக்கொள்ளுதல் என்றும், இடதுபுறம் என்றால் ஏற்றுக்கொள்ளாமையும் ஆகும். அதற்கு அவர்கள் பதில் கூறுகையில்,

## ஆதியாகமம் 24:50,51

**"அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக, இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது. உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும்**

**சொல்லக்கூடாது. இதோ, ரெபேக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள். கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக்கொண்டுபோம் என்றார்கள்."**

மேலும் நாம் தொடர்ந்து வாசிக்கையில்.....

## ஆதியாகமம் 24:53

**"பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபேக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்."**

இங்கு எலியேசர் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் அவர்களுக்கு கொடுத்தார் என்று பார்க்கிறோம்.

முதலில் வெள்ளியும், பின்பு பொன்னாலான பரிசை கொடுத்தார் என்று வாசிக்கும்பொழுது நமக்கு வித்தியாசமாக இருக்கிறதல்லவா?

ஆம், உண்மையில் இதற்கு ஏதோ ஒரு முக்கியத்துவம் இருக்க வேண்டும். தொடர்ந்து நாம் வாசிக்கையில்......

## ஆதியாகமம் 24:54-56

**"பின்பு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்துக் குடித்து, இராத்தங்கினார்கள். காலையிலே எழுந்திருந்து, அவன் என் எஜமானிடத்திற்கு என்னை அனுப்பி விடுங்கள் என்றான். அப்பொழுது அவள் சகோதரனும் அவள் தாயும், பத்து நாளாகிலும் பெண் எங்களோடு இருக்கட்டும். பிற்பாடு போகலாம் என்றார்கள்.**



**அதற்கு அவன், கர்த்தர் என் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணியிருக்க, நீங்கள் எனக்குத் தடைசெய்யாதிருங்கள். நான் என் எஜமானிடத்துக்குப்போக என்னை அனுப்பிவிட வேண்டும் என்றான்.”**

அவர் அன்று இரவு அங்கு தங்கினார். ஆனால் ரெபேக்காளின் குடும்பத்தார் அவரை 10 நாட்கள் அவர்களுடன் தங்கும்படி கேட்டுக்கொண்டனர். ஆனால், மறுநாள் காலையில் எலியேசர் அங்கிருந்து உடனடியாக புறப்பட அனுமதி கேட்டுக்கொண்டார். அவரை 10 நாட்கள் தங்கிவிட்டு போகுமாறு வேண்டினார்கள். ஆனாலும் அவர் உடனடியாக செல்லவேண்டும் என்றதால் அவர்கள் ரெபேக்காளை அழைத்து அவளுடைய வாய்மொழியைக் கேட்டார்கள்.

## ஆதியாகமம் 24:58

**“ரெபேக்காளை அழைத்து... நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள்; அவள் போகிறேன் என்றாள்.”**

அவர்கள் ரெபேக்காளிடம் கேட்கையில், அவள் உடனே **“நான் போகிறேன்”** என்று கூறினாள்.



வெறும் 24 மணி நேரமே அறிந்த ஒரு மனிதருடன் செல்ல மனமுவந்து சம்மதம் தருகிறாள் என்றால் அவளுடைய விசுவாசத்தை நாம் சற்று சிந்திக்க வேண்டும். அவள் இந்த ஒரு முடிவில் தன் வாழ்க்கையை முற்றிலும் பணையம் வைத்தாள்.

மேலும் நாம் வாசிக்கையில்....

## ஆதியாகமம் 24:60

**“ரெபேக்காளை வாழ்த்தி - எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக. உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்களாக என்று ஆசீர்வதித்தார்கள்.”**



ஆம், ரெபேக்காள் வினோதமான ஆசீர்வாதத்தால் ஆசீர்வதிக்கப்பட்டாள்....

**"நீ கோடாகோடியாய் பெருகுவாயாக...."**
**என்பது ஒரு வினோதமான காரியமாக இருக்கிறதல்லவா?**

**அவ்வளவு குழந்தைகளை பெற்றெடுப்பது எவ்விதத்தில் சாத்தியமாகும்?**

இவ்வார்த்தையின் முக்கியத்துவத்தை இப்பாடத்தின் பின்பகுதியில் உணர்ந்துகொள்வோம். மேலும் வாசிக்கையில்,



**ஆதியாகமம் 24:61**

**"அப்பொழுது ரெபேக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மேல் ஏறி, அந்த மனிதனோடே கூடப்போனார்கள். ஊழியக்காரன் ரெபேக்காளை அழைத்துக் கொண்டுபோனான்."**

ஆம், இறுதியாக ரெபேக்காள் எலியேசருடனும், அவளுக்கு ஊழியம் புரிய கன்னிகளாகிய தோழிகளுடனும் நாகோரைவிட்டு புறப்படுகிறாள். அவர்கள் ஆபிரகாமின் தேசமாகிய கானானை நோக்கி நீண்ட பயணத்தை தொடங்கினார்கள்.

அந்த பயணத்தின் இறுதியில்....

**ஆதியாகமம் 24:62-67**

**"ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருந்தான். அப்பொழுது அவன் – லகாய்ரோயீ என்னப்பட்ட துரவின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான். ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான். ரெபேக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது , ஊழியக்காரனை நோக்கி, அங்கே வருகிற**

**அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள். ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச் சொன்னான். அப்பொழுது ஈசாக்கு ரெபேக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்."**



இங்கு ஊழியக்காரனாகிய எலியேசர், தன் எஜமானரை ரெபேக்காளுக்கு அறிமுகபடுத்தி, தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச் சொல்கிறார்.

அவள் உடனே தன்னை முக்காடிட்டுக் கொண்ட பிறகு ஈசாக்கை சந்தித்தாள். ஈசாக்கு ரெபேக்காளை மணமுடித்தபின்பு ரெபேக்காள் ஈசாக்கின் மனைவி ஆனாள்.

**இந்த வேத பகுதியானது - ஆபிரகாமின் வாழ்வில் நடந்த உண்மையான சம்பவங்களாய் இருந்தாலும், நமக்கு "திருஷ்டாந்தமாகவும்"..."நிழலாகவும்" இருக்கிறது.**

**இது சபையாகிய - நமக்கு "விசேஷமும், முக்கியத்துவம் நிறைந்த" ஏதோ ஒன்றை குறித்து நடித்து காண்பிக்கப்பட்ட மேற்கோளாகும்.**

திருஷ்டாந்தம் என்றால் என்ன என்றும், இந்த பகுதியில் நமக்குள்ள திருஷ்டாந்தங்கள் என்ன என்று பார்ப்போம். இங்கு ஆபிரகாம் தன் ஒரே பேறான குமாரனான ஈசாக்கிற்கு மணவாட்டியை தேர்ந்தெடுக்க ஆட்களை எவ்வாறு அனுப்பினாரோ, அதே போல் இன்றும் ஒரு மணவாட்டியை தேர்வு செய்ய ஒரு தேர்வு நடந்துகொண்டிருக்கிறது.

இதைக் குறித்து நாம் வாசிக்கும்போது....

### 2 கொரிந்தியர் 11:2

**"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால்...."**

**ஆம், இது இயேசு கிறிஸ்துவின் மணவாட்டிக்கான தேர்வாகும். அந்த மணவாட்டி "சபை" ஆகும்.**

### வெளிப்படுத்தல் 19:7

**"....ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்."**

**இந்த திருஷ்டாந்தத்தின் மூலமாகவும், நிழலின் மூலமாகவும் இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி - சபை தேர்வு செய்யப்படும் விதத்தை நாம் இன்றைக்கு தெளிவாகவும், ஆழமாகவும் புரிந்துகொள்ள போகிறோம்.**

இப்பொழுது, இந்த திருஷ்டாந்தத்தில் உள்ள பல்வேறு நிழல்களை பற்றி தியானிக்கலாம்.

## ஆபிரகாம்

**பிதாவாகிய தேவனை நிழலாக பிரதிபலிக்கிறார்.**

இது தேவன் தன் ஒரே பேறான குமாரனை இந்த உலகத்தின் இரட்சிப்பிற்காக பலி கொடுத்ததுபோல், ஆபிரகாமும் தன் ஒரே

குமாரனை மனப்பூர்வமாக பலி செலுத்துவதற்கு ஒப்புக்கொடுத்ததின் மூலம் (யோவான் 3:16) நிரூபணமாகிறது.

**ஈசாக்கு**

**தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை குறிக்கிறார்.** (யோவான் 1:18)

**எலியேசர்**

எலியேசர் ஆபிரகாமின் பிரதான ஊழியக்காரன். அதுபோல் தேவனும் அவருடைய பணிகளை செய்வதற்கு முதன்மையான ஊழியக்காரர்களை வைத்திருக்கிறார். ஊழியக்காரர்கள் என்றுமே தாங்களாக கருத்துக்களைகூற இயலாதது போல் தேவனுடைய ஊழியக்காரர்களும் தங்களுடைய சுய கருத்துக்களை கூற இயலாது.

## யோவான் 16:13

**"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தான் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்."**

ஆம், தெய்வீக வல்லமையான பரிசுத்த ஆவியின் மூலமே இன்று சபையானது தேர்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதை குறித்து...

## லூக்கா 24:49

**"என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்."**

**ஆம், எலியேசர் தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு நிழலாக இருக்கிறார்.**

தொடர்ந்து பார்க்கும்பொழுது,

## ஆதியாகமம் 24:3

**"நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல்...."**

தேவன் தம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தூதர்கள் மத்தியில் தம்முடைய குமாரனுக்கு மணவாட்டியை தேர்வு செய்ய விரும்பவில்லை.

ஆனால், தேர்வு செய்ய வேண்டிய விதிமுறைகள் மிகவும் தெளிவாக இருந்தது.



## ஆதியாகமம் 24:4

**“நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய்...”**

ஆம், இது பரலோகத்திலிருந்து தூர தேசமாகிய – பூமியை குறிக்கிறது. ஆம், தேவன் தன்னுடைய குமாரனுக்கான மணவாட்டியை மனுக்குலத்திலிருந்து தேர்வு செய்ய முடிவு செய்தார்.

## ஆதியாகமம் 24:10

**“....தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டு....”**

இது தேவனுடைய வார்த்தைகளை அதிலும் குறிப்பாக 10 முக்கியமான சத்தியங்களை, “பத்து வெள்ளி காசு” குறிப்பது போல அடையாளப்படுத்துகிறது.

இதை குறித்து நாம் லூக்கா 15:8 வசனத்தில் சொல்லப்பட்ட உவமையை (பத்து வெள்ளி காசு என்ற பாடத்தின் மூலம்) ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம்.

பரிசுத்த ஆவியே இந்த சத்தியங்களை எடுத்துச் சென்று திருச்சபைக்கு வெளிப்படுத்துகிறது.

**“அவர் சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்” (யோவான் 16:13)**

## ஆதியாகமம் 24:11

**“ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே...”**

இந்த கிணறு ஜீவத்தண்ணீரைக் கொண்ட வேதாகமத்தை குறிக்கிறது.

**“தண்ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்கால வேளையில்...”**

இது ஜீவத்தண்ணீரான தேவ வார்த்தைகளை வாஞ்சையுடன் தேடுகின்ற இன்றைய பல்வேறு சபைகளில் உள்ள கிறிஸ்தவர்களைக் குறிக்கும்.

## யோவான் 4:10

**"...நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்..."**




**தீர்மானிக்கப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டியாகிய - சபையை குறிக்கிறாள்.**

அவள் மிகவும் அழகுள்ள கன்னியுமாய் இருந்தாள் என்பது, மணவாட்டியின் குணநலன்களையும், அவர்கள் தேவனுடைய பரிசுத்தமான சத்தியத்தின் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தையும் குறிக்கிறது.

## ஆதியாகமம் 24:20

**"..சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி... ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்."**

இது "மணவாட்டி" வகுப்பார். தேவன்பேரிலும் அவருடைய சத்தியத்தின் மேலும் கொண்ட வாஞ்சையும், அதை எடுத்துரைப்பதில் அயராத உழைப்பையும், ஆற்றலையும், உற்சாகத்தையும் காட்டுகிறது. பின்பு நாம் வாசிக்கையில்,

## ஆதியாகமம் 24:22

**"...அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும்,... பத்துச் சேக்கல் எடைப் பொன்னுள்ள இரண்டு கடகங்களையும்..."**

**இவைகள் விலையுயர்ந்த பரிசுகளாயிற்றே. இவை எதை குறிக்கிறது?**

இது **"மணவாட்டி"** வகுப்பார் **பரிசுத்த ஆவியின் (எலியேசர்)** மூலமாக பெறக்கூடிய **"பொன்னான" பரிசுகள்** அல்லது **"தெய்வீக பரிசுகளை"** குறிக்கும்.

[(பொன் என்பது தெய்வீக குணத்தைக் காட்டுகிறது, ஆசரிப்பு கூடாரத்தில், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் பசும்பொன்னால் செய்யப்பட்டது.)]




தேவன் தன்னுடைய தெய்வீக வல்லமையினால் பிறக்கும் **"புரிந்து கொள்ளுதலுக்கான காதை"** குறிக்கும்.

இயேசுவின் வார்த்தைகளை நினைவு படுத்துங்கள் –
**"காதுள்ளவன் கேட்கக்கடவன்"**
என்ற இந்த வார்த்தைகளின் மூலம் அவர் சொல்லவந்தது என்னவெனில்," இந்த காதணிகளை பரிசுத்த ஆவியின் வல்லமையால் பெற்றுக்கொண்டவர்கள் யாவரும் கேட்கக்கடவர்கள்" என்பதே.




தெய்வீக அதிகாரத்துடன் தேவனிடத்திலிருந்து பெறப்படும் அவருடைய ஊழியங்களை செய்யக்கூடிய வாய்ப்புக்களை குறிக்கும்... ஏனென்றால் கரங்கள் என்பது ஊழியம் அல்லது வேலையை குறிக்கிறது.

மேலும், திருமணத்தின் காரியங்கள் நிச்சயப்படுத்தப்பட்ட பின்பும் ரெபேக்காளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம்.

## ஆதியாகமம் 24:53

**"....வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து ரெபேக்காளுக்கு..."**

இது தீர்மானிக்கப்பட்ட "மணவாட்டி" வகுப்பார் கிறிஸ்தவ விசுவாசத்திலும் தேவனுடைய வார்த்தையாகிய ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்த பின்பு பெற்றுகொள்ளும் பரிசுகளாகும்.

## வெள்ளி நகைகள்

தேவனுடைய விலையேறப்பெற்ற சத்தியத்தை வெள்ளிக்கு ஒப்பாக சொல்லப்படுகிறது. இதை வசனத்தில் வாசிக்கலாம்.

## சங்கீதம் 12:6

**"கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது."**

ஆம், தேவனுடைய வசனங்களும், தேவனுடைய தெய்வீகத் திட்டத்தில் உள்ள சத்தியங்களும் திறக்கப்பட்டு, புரிந்து கொள்ளப்படுகிறது. இதுவே முதலில் பெற்று கொள்ளுகிற பரிசாகும்.

## பொன் ஆபரணங்கள்

இது திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் "மணவாட்டி" வகுப்பாருக்கு அளிக்கப்பட்ட மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை குறிக்கும்.

### 2 பேதுரு 1:4

**"....திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது..."**

ஆம், இங்கு பொன் என்பது "சபை" வகுப்பாருக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற "பரலோக இரட்சிப்புக்கான" அழைப்பை குறிக்கிறது.

இதைப் பற்றின விவரங்களை தொடர் பாடங்களாக நாம் 17,18,19-ம் பாடத்தில் பார்க்க இருக்கிறோம்.

## வஸ்திரங்கள்

இது நம்முடைய பாவங்களை மறைத்து நம்மை "பரலோக கிருபாசனத்திற்கு" நம்மை தகுதிப்படுத்துவதற்கும் நம்மை "நீதிமானாக்கவும்" கொடுக்கப்பட்ட நீதியின் வஸ்திரமாகும். இதை குறித்து வாசிக்கையில்,

### ஏசாயா 61:10

**"....அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்கு தரித்து...."**


ஆம், அந்த வஸ்திரம் தேவனுடைய நீதியையும் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நமக்காக சிந்திய இரத்தத்தால் நம் பாவங்கள் மூடப்பட்டதையும் குறிக்கிறது.

**இவ்வாறு, சபையானது அனைத்து "ஆவிக்குரிய" பரிசுகளை எலியேசர் நிழலாக குறிக்கிற பரிசுத்த ஆவியின்மூலம் பெற்றுக்கொள்கிறார்கள்.**

மேலும் நாம் வாசிக்கையில்...

## ஆதியாகமம் 24:58

**“ரெபேக்காளை அழைத்து நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள் போகிறேன் என்றாள்.”**





இது இயேசு கிறிஸ்துவின் மேல் சபை வைத்திருந்த நம்பிக்கையும் விசுவாசத்தையும் மற்றும் என்ன நேர்ந்தாலும் **கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்ற அவர்கள் முழு மனதுடன்** சம்மதிப்பதையும் குறிக்கிறது.

நிச்சயமாக நாம் காணாதவர் மேல் அன்பு கூறுகிறோம்.(1 பேதுரு 1:8)

ரெபேக்காள் தன் வாழ்க்கையை பணையம் வைத்து முன்பின் பழக்கம் இல்லாதவரோடு போக துணிந்தது சபை மக்களும் கண்ணால் காண முடியாத ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக தங்களுடைய வாழ்க்கையை வாழ ஒப்புக்கொடுப்பதை குறிக்கிறது.

பின்பு, அவளுக்கு சொல்லப்பட்ட விசித்திரமான ஆசீர்வாதத்தை வாசிக்கையில்,

## ஆதியாகமம் 24:60

**“...நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக...”**

**இந்த விநோதமான ஆசீர்வாதங்களுக்கு பொருள் என்ன ?**

**ஒரு பெண் இத்தனை குழந்தைகள் பெற முடியுமா ?**

கற்பனை செய்து பாருங்கள்....

ஆம், இங்கு ரெபேக்காள் யாரை குறிக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டால் மாத்திரமே இந்த ஆசீர்வாதம் எதைப் பற்றியது என்று அறிந்துகொள்ள முடியும்.

**“அவள் ஆட்டுக் குட்டியானவரின் மணவாட்டியாக கர்த்தருடன் கூட**

**மகிமைப் பெற போகின்ற சபையை குறிக்கிறாள் என்று நாம் அறிந்திருக்கிறோம்."** (வெளிப்படுத்தல் 22:17)

இதைவிட பெரிய காரியங்களும் உள்ளன...

அவள் இரண்டாம் ஆதாமினுடைய இரண்டாம் ஏவாளாக இருக்கப் போகிறாள்.**(1 கொரிந்தியர் 15:45)**

அது மாத்திரம் அல்ல, உயிர்த்தெழுதலின் போது கிறிஸ்துவும் சபையும் இணைந்து இந்த உலகத்திற்கு ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் அளிப்பார்கள்.

## வெளிப்படுத்தல் 22:17

**"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."**

ஆம், இந்த உலகில் வாழும் கோடிக்கணக்கான ஜனங்களே **"கோடாகோடியாக பெருகுவாய்"** என்பதை குறிக்கிறது."

மேலும் நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் 10-31 வசனங்களில் சொல்லப்பட்ட குணசாலியான ஸ்திரீ கிறிஸ்துவின் சபையாகிய மணவாட்டியை குறிக்கிறாள்.

மீண்டுமாக 28-ம் வசனத்தை வாசிக்கையில்,

**"அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்.."**

ஆம், இது உலக மக்கள் அனைவரும் உயிர்த்தெழுதலில் எழுந்து கிறிஸ்துவுக்கும், மணவாட்டிக்கும் கோடிக்கணக்கான பிள்ளைகள் ஆவதை குறிக்கும். தொடர்ந்து...

## ஆதியாகமம் 24:61

**"..ரெபேக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மேல் ஏறி, அந்த மனிதனோடே கூடப்போனார்கள்..."**

ரெபேக்காள், எலியேசருடைய பயணம், சுவிசேஷ யுகத்தின் மாம்சத்திலிருக்கும் சபையின் "பூமிக்குரிய பயணத்தை" குறிக்கும்.

ஆம்,பரம கானானை நோக்கின பயணம்.

கடைசியாக நாம் வாசிக்கையில்,

## ஆதியாகமம் 24:62-67

**"ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருந்தான். அப்பொழுது அவன் – லகாய்ரோயீ என்னப்பட்ட துரவின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான். ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான். ரெபேக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது, ஊழியக்காரனை நோக்கி, அங்கே வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர் தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள். ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச் சொன்னான். அப்பொழுது ஈசாக்கு ரெபேக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்."**

இவைகள், சுவிசேஷ யுகத்தின் முடிவையும், கிறிஸ்துவின் இரண்டாவது வருகையையும் முதலாம் உயிர்த்தெழுதலின் போது சபையானது தன் ஆண்டவரை சந்திக்கும் நேரத்தையும் குறிக்கிறது. இதுவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது. **(1தெசலோனிக்கேயர் 4:16)**

**இவைகளுடைய ஆழமான கருத்துகளை வரும் பாடங்களில் பார்க்கலாம்.**

இங்கு ஈசாக்கு தன் மனைவியின் அழகைக் காண அவள் மூடியிருந்த முக்காட்டை திறந்திருக்க வேண்டும். அதுபோல் நம்முடைய ஆண்டவரும் நமக்குள்ளே மறைந்திருக்கும் அழகைக் காண விரும்புகிறார்.

எந்த விதமான அழகைக் காண இயேசு விரும்புகிறார் என்று வாசிக்கையில்,

## 1 பேதுரு 3:3,4

**"மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது."**

ஆம், நமக்குள் மறைந்திருக்கும் பரிசுத்தம், உண்மை என்ற அழகை ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

இது மிகுந்த உபத்திரவங்களினாலும் சுயத்தை வெறுப்பதினாலும் நமக்கு கிடைக்கும் நல்ல குணங்களாகிய உண்மையும், பரிசுத்தமுமாம்.

இதையே நம்முடைய ஆண்டவர் நம்மிடத்தில் தேடுகிறார்.

இப்படியாக மணவாட்டி எப்பொழுதும் கர்த்தருடன்கூட இருப்பாள். **(1 தெசலோனிக்கேயர் 4:17)**

ஆம், ஈசாக்கு - ரெபேக்காளின் காதல் கதை திருமணத்தில் முடிந்தது போல இயேசுவும் அவருடைய சபையின் கதையும் ஆட்டுக்குட்டியானவரின் பிரம்மாண்டமான திருமணத்தில் நிறைவேறும்.

**இப்படியாக, தேவனின் தெய்வீக சத்தியங்களை கற்றுக்கொடுக்கிற, பிரதிபலிக்கிற திருஷ்டாந்தம் (அல்லது) நிழலை பழைய ஏற்பாட்டிலிருந்து தியானித்தோம்.**

பழைய ஏற்பாட்டில் இதுபோல் இன்னும் அநேக நிகழ்ச்சிகளும், திருஷ்டாந்தங்களும் உள்ளன.

**மோசேயை மத்தியஸ்த்தராகக் கொண்டு எவ்வாறு இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமை தனத்திலிருந்து விடுதலையடைந்து கானான் தேசத்தை நோக்கி பயணம் சென்றார்கள்.**


**ஆசரிப்புக் கூடாரமும் அவைகளில் செலுத்தப்பட்ட பலிகளும் அதனுடைய முக்கியத்துவமும் எதை அடையாளப்படுத்துகிறது ? (எபிரேயர் 9:9,10)**

**தேவனுடைய சட்டமும், அதில் அமைந்துள்ள பஸ்காவும், யூபிலி,..... இன்னும் அநேக காரியங்கள் உள்ளது.**

**வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட ஆவிக்குரிய உண்மைகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி நாம் இன்னும் வரப்போகும் பாடங்களில் வாசித்து அறியலாம்.**

**...ஆமென்....**

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com